




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351









## ஆம்பூர் அருகே ரயில் தண்டவாளத்தில் பாறைகள்

# பேரதிர்ச்சி

## ரயிலை கவிழ்க்க சதியா என்ற கோணத்தில் புலனாய்வுக் குழுவினர் விசாரணை

**திருப்பத்தூர், ஜூன். 26-**

**ஆம்பூர் அருகே ரயில் தண்டவாளத்தில் வைக்கப்பட்ட பாறைகள் மீது விரைவு ரயில் மோதியது. ரயிலை கவிழ்க்க சதி வேலை நடத்தப்பட்டதா? என்ற கோணத்தில் சென்னை புலனாய்வுக் குழுவினர் மோப்ப நாயுடன் விசாரணை நடத்தி வருகின்றனர்.**





கர்நாடக மாநிலம், மைசூரில் இருந்து பெங்களூர் மற்றும் திருப்பத்தூர், வாணியம்பாடி ஆம்பூர் வழியாக சென்னை வரை செல்லக்கூடிய காவிரி விரைவு ரயில் இந்த வழித்தடத்தில் தினமும் இயக்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஆம்பூர் அருகே நேற்று விடியற்காலை 3:30 மணியளவில் காவிரி விரைவு ரயில் வேகமாக வந்துகொண்டிருந்தது.

ஆம்பூர் அடுத்த வீரவர் கோயில் அருகே விரைவு ரயில் வந்தபோது, பெங்களூரு - சென்னை செல்லும் வழித் தடத்தில் தண்டவாளத்தின் மீது பாறை கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இதை கண்ட ரயில் இன்ஜின் ஓட்டுநர் ரயிலை நிறுத்த முயன்றார். ஆனால், ரயில் வந்த வேகத்தில் அந்த பாறை கற்கள் மீது ரயில் இன்ஜின் மோதியது. இதில், பாறை கற்கள் சிதறின. இருந்தாலும், பாறை கற்கள் மீது ரயில் இன்ஜின் மோதிய சத்தம் பெரிய அளவில் கேட்டது.

அதிகாலை நேரம் என்பதால் ரயிலில் பயணித்த பயணிகள் அசந்து தூங்கிக் கொண்டிருந்தனர். ரயில் மோதிய சத்தம் கேட்டதும், பயணிகள் அலறியடித்துக் கண் விழித்து ரயில் விபத்துக்குள்ளானதாக உணர்ந்து கூச்சலிட்டனர். உடனே, ரயில் இன்ஜின் ஓட்டுநர் ரயிலின் வேகத்தை குறைத்தார். பிறகு ஆம்பூர் அடுத்த பச்சக்குப்பம் ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தப்பட்டது.

இது குறித்து ஜோலார்பேட்டை மற்றும் காட்பாடி ரயில்வே நிலையத்துக்கு ரயில் இன்ஜின் ஓட்டுநர் தகவல் கொடுத்தார். அதன் பேரில், ஜோலார்பேட்டை ரயில்வே காவல் ஆய்வாளர் இளவரசி தலைமையிலான ரயில்வே காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். வீரவர் கோயில் அருகாமையில் உள்ள கடைகள் மற்றும் கோயில் பகுதிகளில் இருந்த நபர்களிடம் இது தொடர்பாக காவல் துறையினர் விசாரணை நடத்தினர்.

இதில், எந்த துப்பும் கிடைக்கவில்லை. ரயிலை கவிழ்க்க தண்டவாளத்தில் கற்கள் வைக்கப்பட்டதா? என்ற கோணத்திலும் காவல் துறையினர் விசாரணை நடத்தினர். இதையடுத்து, சென்னையில் இருந்து ரயில்வே புலனாய்வுக் குழுவினர் மோப்ப நாய் ஜான்சியுடன் ஆம்பூர் வந்தனர். மோப்ப நாயின் பயிற்சியாளர் ராபின் உத்தரவுபடி மோப்ப நாய் ஜான்சி தண்டவாளத்தில் கற்கள் வைக்கப்பட்ட இடத்தில் இருந்து கிழக்கு நோக்கி சிறிது தூரம் சென்றது. பின்னர், மேற்கு நோக்கி சிறிது தூரம் சென்ற மோப்ப நாய் அங்கேயே நின்றது.

பிறகு மீண்டும் திரும்பி பாறை கற்கள் வைக்கப்பட்ட இடத்துக்கு வந்தது. பச்சக்குப்பம் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்ட காவேரி விரைவுரயில் 30 நிமிடங்கள் கழித்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, பெங்களூர் - சென்னை வழித்தடத்தில் செல்லும் திருவனந்தபுரம் விரைவு ரயில் உள்ளிட்ட 3 ரயில்கள் அரை மணி நேரம் காலதாமதமாக இயக்கப்பட்டது. சென்னை - பெங்களூரு ரயில் வழித்தடத்தில் நாள் தோறும் 120-க்கும் மேற்பட்ட பயணிகள் ரயில்களும், 100-க்கணக்கான சரக்கு ரயில்களும் இயக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களை இணைக்கும் முக்கிய ரயில் வழித் தடம் என்பதால் தண்டவாளத்தின் மீது பாறைகள் கற்கள் அடுக்கி வைக்கப்பட்ட இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. ஒடிசாவில் கடந்த சில நாட்களுக்கு முன்பு 3 ரயில்கள் தடம் புரண்டதால் 290-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான பயணிகள் காயமடைந்தனர். இந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ஜோலார்பேட்டை அருகே ரயில் தண்டவாள இணைப்பு (பாயிண்ட்) சேதப்படுத்தப்பட்ட சம்பவம் குறித்து ரயில்வே காவல் துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வரும் நிலையில், தற்போது ஆம்பூர் அருகே தண்டவாளத்தில் பாறைகள் கற்கள் அடுக்கி வைக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. சேலம் ரயில்வே உட்கோட்ட ரயில்வே பாதுகாப்புப் படை டிஎஸ்பி பெரியசாமி தலைமையிலான 10 காவலர்கள் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆன்மிகத்தால் மக்களை பிரிக்கும் கட்சிகளுக்கு தமிழகத்தில் இடமில்லை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு

மதுரை , **ஜூன். 26-**

ஆன்மிகத்தால் மக்களை பிரிக்கும் கட்சிகளுக்கு தமிழகத்தில் இடமில்லை என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



தமிழக மக்கள் ஒற்றுமை மேடை சார்பில் 'இந்து அறநிலையத்துறை கண்காணிப்பில் இந்து ஆலயங்களை காப்போம்' என்ற சிறப்பு மாநாடு மதுரையில் நேற்று நடைபெற்றது. இதற்கு மாநகர ஒருங்கிணைப்பாளர் என். ஜெயச்சந்திரன் தலைமை வகித்தார். புறநகர் ஒருங்கிணைப்பாளர் வே.உமாமகேஸ்வரன் முன்னிலை வகித்தார். இம்மாநாட்டில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது: "மதவாத சக்திகளுக்கு தமிழக மண் இடம் தராது. திமுக ஆட்சியில் நடந்த ஆன்மிக புரட்சிபோல் எந்த ஆட்சியிலும் பார்த்திருக்க முடியாது.

ஒருகால பூஜை திட்டத்தில் 13,589 கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் தினந்தோறும் விளக்கேற்றுவதற்கு கூட வசதியில்லாத நிலையில் ரூ.129 கோடி நிதியை வழங்கி தமிழக முதல்வர் மேம்படுத்தினார். 1 லட்சமாக இருந்த மானியத்தை ரூ. 2 லட்சமாக உயர்த்திகாட்டிய பெருமை திராவிட மாடல் ஆட்சியைச் சேரும். ஒரு கால பூஜை நடைபெறும் கோயில்களுக்கு அர்ச்சகர்களுக்கு வருமானம் கிடையாது என்பதை உணர்ந்த முதல்வர் அவர்களையும் அங்கீகரித்து மாதந்தோறும் ரூ.1000 வழங்கினார். இதன் மூலம் தமிழகத்தில் 10 ஆயிரம் அர்ச்சகர் குடும்பங்களை வாழவைத்துள்ளார்.

மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட கோயில்கள் புராதன சின்னங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என முதல்வர் அறிவித்துள்ளார். அதன்படி 517 கோயில்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்கள் என்று கண்டறிந்து அழியும் நிலையிலுள்ள 68 கோயில்கள், 48 உபயம் மூலம் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள 2022-23ம் ஆண்டில் ரூ.100 கோடியை மானியமாக தந்துள்ளார். இந்து சமய அறநிலையத்துறை ஆரம்பிக்கப்பட்ட 1959ம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் நடைபெற்ற ஆட்சியில் அதிகமான திருக்கோயில்களுக்கு அரசு சார்பில் மானியமாக வாரி வழங்கியது திராவிட மாடல் ஆட்சிதான்.

அறநிலையத் துறையின் கண்காணிப்பில் ஆலயங்களை காப்போம் என்பதற்கு திமுக ஆட்சி இலக்கணமாகத் திகழ்கிறது. எப்போதும் இலக்கணமாக இருப்போம். மேலும் ஆலோசனைகளை வழங்கி எங்களை வழிநடத்துங்கள். அதன்படி செயலாற்றுவோம். ஆன்மிகத்தால் மக்களைப் பிரிக்கின்ற கட்சிகளுக்கு தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இருக்கும் வரை இடமில்லை. இது திராவிட மாடல் ஆட்சி" என்றார்.

இந்த கூட்டத்தில், சு.வெங்கடேசன் எம்பி, எம்எல்ஏக்கள் கோ.தளபதி, பூமிநாதன், மார்க்சிஸ்ட் மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம், மாநில ஒருங்கிணைப்பாளர் அருணன், தமிழ் சைவ பேரவை தலைவர் மா.கலையரசி நடராஜன் ஆகியோர் பேசினர். முடிவில், பேராசிரியர் எஸ்.விவேகாநந்தன் நன்றி கூறினார்.

## அறந்தாங்கியில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் கொடியேற்றும் விழா - எம்.பி ஜி.கே.வாசன் பங்கேற்பு

அறந்தாங்கி,ஜூன்.26-

அதிமுகவின் கூட்டணி கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவரும்,எம்.பியுமான GK.வாசன் அறந்தாங்கி பகுதியில் நடைபெற்ற கட்சி நிர்வாகியின் இல்ல திருமண விழா மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் கொடியேற்றும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்..



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அடுத்த மணமேல்குடியில் நடைபெற்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் வட்டாத் தலைவர் ஜெயராஜன் இல்ல திருமண விழாவில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவரும்,எம். பியுமான G.K.வாசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.அதன் பிறகு ஆவுடையார்கோவில் கடைவீதியில் தமிழ்மாநில காங்கிரஸ் கட்சியின் ஆவுடையார்கோயில் வடக்கு வட்டார தலைவர் ராமநாதன் மற்றும் தெற்கு வட்டார தலைவர் கருப்பையா ஆகியோரின் ஏற்பாட்டின் படி கட்சி கொடி ஏற்றும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன்னதாக நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வருகை தந்த அவருக்கு கட்சியின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.அதன் பிறகு கட்சியின் கொடியை ஏற்றிய GK.வாசன் பொதுமக்களிடம் மற்றும் கட்சி தொண்டர்களிடம் பேசுகையில் கட்சியின் நிர்வாகிகள் தொடர்ந்து மக்கள் பணியையும்,கட்சி பணியையும் செயல்படுத்த வேண்டும் என்றும், தமிழக மக்களை பொறுத்தவரையில் நேர்மையான நல்லாட்சி வர வேண்டும் என்றும் எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி செயல்படும் என்றும் அந்த நம்பிக்கையை மக்களிடம் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வின் பொழுது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாவட்ட, ஒன்றிய, வட்டார நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணியை சேர்ந்த நிர்வாகிகள் என சுமார் 50-ம் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




**புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும் 6வது புத்தகத் திருவிழா புதுக்கோட்டை நகர் மன்றத்தில் ஜூலை மாதம் 28ஆம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதற்கு பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புதுக்கோட்டையில் முக்கிய இடங்களில் சுவர் விளம்பரம் செய்யப்பட்டு இருப்பதை படத்தில் காணலாம்.**

## 28 லட்சத்தில் புதிய பள்ளி கட்டிடம் எம்எல்ஏ ராமசந்திரன் அடிக்கல் நாட்டினார்

அறந்தாங்கி,ஜூன்.26-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியை அடுத்த மூக்குடி ஊராட்சியில் 28 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடத்திற்கு அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமசந்திரன் அடிக்கல் நாட்டினார்.



மூக்குடி ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் மாணவர்கள் மரத்தின் நிழலில் இருந்து படிக்கும் நிலை ஏற்பட்டது. அதனால் அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமசந்திரன் தொகுதி நிதியிலிருந்து 28 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

நகர தலைவர் கிருபாகரன், கூடலூர்முத்து, தேவதாஸ் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், ஓய்வு ஆசிரியர் நடராசன், தலைமையாசிரியை சரஸ்வதி, ஆசிரியர்கள் ஜோதிமணி, ஆர். பாரதி, ரெத்தின முத்து வள்ளி, தமிழரசி, சத்தியா, சித்ரா, பால்ராஜ், வட்டார கல்வி அலுவலர் நிஸார், ஊர் அம்பலம் அம்பாள் சுப்ரமணியன், ஊராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர், ஒன்றிய கவுன்சிலர், ஊர் முக்கிய பிரமுகர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் ஹெச்ஐவி உள்ளோர் நலச்சங்கத்தின் பொதுக்குழு கூட்டம்

**புதுக்கோட்டை , ஜூன். 26-**

ஹெச்ஐவி உள்ளோர் நலச்சங்கத்தின் 2022-2023ஆம் ஆண்டுக்கான பொதுக்குழு கூட்டம் நேற்று மச்சுவாடியில் உள்ள அதன் அலுவலகத்தில் நடைபெற்றது.



கூட்டத்திற்கு அதன் தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். மாவட்டம்தோறும் இருக்கும் இவ்வமைப்பின் மூலம் ஹெச்ஐவி உள்ளோர்களைக் கண்டறிவது, அவர்களுக்கு நல் ஆலோசனைகளை வழங்குவது, தேவையான மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொடுப்பது, அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளைப் பெற்றுத் தருவது, புரவலர்கள் மூலமாக உதவிகளைப் பெற்றுத்தருவது என்று பல பணிகள் நடைபெறுகிறது.

தலைவர் ராமசாமி கடந்த ஆண்டில் செய்த பணிகளை விரிவாக எடுத்துக் கூறினார். அமைப்பின் செயலர் அழகேசன் எதிர்கால திட்டங்களை எடுத்துக் கூறினார். பொருளாளர் அம்சவல்லி வரவு செலவு அறிக்கை வாசித்தார். இந்த கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட புதுக்கோட்டை மாவட்ட இந்திய ரெட்கிராஸ் சங்க இணைச்செயலர் சா.விஸ்வநாதன், "ART மருத்துவரின் ஆலோசனைப்படி ART சிகிச்சையை தொடர்ந்து மேற்கொண்டால் தன்னம்பிக்கையுடன் மகிழ்ச்சியுடன் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழலாம்" என்ற வாசகங்கள் அடங்கிய 'நம்பிக்கையுடன் வாழ' என்ற போஸ்டரை வெளியிட்டுப் பேசினார்.

ஹெச்ஐவி உள்ளவர்கள் முறையாக உணவும், மாத்திரையும் எடுத்துக்கொண்டால் நீண்டகாலம் உயிர் வாழலாம் என்பதற்கு படத்தில் இருக்கும் ராமசாமியே உதாரணம். உயிர் போகும் தருவாயில் இருந்தவர் 25 ஆண்டுகளைக் கடந்து இன்னும் நலமுடன் வாழ்ந்து கொண்டிருப்பதோடு ஆயிரக்கணக்கான ஹெச்ஐவி தொற்றாளர்களுக்கு உதவக்கூடியவராகவும், வழிகாட்டியாகவும் இருந்து கொண்டிருக்கிறார். நோய் வந்துவிட்டதே என்று வருந்துவதை விட்டு சரியான வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டு நீண்டகாலம் வாழ முயற்சி எடுக்கவேண்டும் என்று பொதுக்குழுவில் கலந்துகொண்ட உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார். புதுக்கோட்டையில் இந்த அமைப்பின் மூலம் 3393 பேர் கண்டறியப்பட்டு முறையான மருத்துவ ஆலோசனைகளும், சிகிச்சைகளும், மாத்திரைகளும் அரசு வழங்கும் உதவிகளும் பெற்று வழங்கப்படுகிறது.

# இன்று

# 26-6-2023

அஷ்டமி

அம்மன் பச்சரிசி கண்டைக்காய் அளவு கொடுத்தால் குழந்தை வயிற்று புண் ஆறும்

சக வருடம் 1945 ஆஷாடம் 05

| சோபகிருது ஆனி 11 | JUN - MON திங்கள் | துல்ஹிஜ்ஜா 7 வளர்பிறை 177 / 188 | இராசிபலன் |
|---|---|---|---|
| வளர். அஷ்டமி 42.53 (மா. 11.07) உத்திரம் 11.43 (கா. 10.36) தியாஜ் 34.04 அகஸ் 31.27 சித்த. ஆனி உத்திர தரிசனம், மதுராந்தகம் கோதண்டராமசுவாமி உற்சவாரம்பம். திருஉத்திரகோசமங்கை சிவபெருமான் புறப்பாடு. சாத்தூர் வேங்கடேச பெருமான் பவனி. கொடிய நகசு. | | | மேஷம் - போட்டி<br>ரிஷபம் - பொறுமை<br>மிதுனம் - நலம்<br>கடகம் - லாபம்<br>சிம்மம் - இரக்கம்<br>கன்னி - சிந்தனை<br>துலாம் - மறதி<br>விருச்சி - சாதனை<br>தனுசு - நட்பு<br>மகரம் - வெற்றி<br>கும்பம் - அசதி<br>மீனம் - புகழ் |

| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.30-7.30 | 9.30-10.30 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 1.30-2.30 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; மிதுன லக்னம் இருப்பு நா. 3 வி. 33; சந்திராஷ்டமம் அவிட்டம் சதயம்

கரணம் : 9-10.30 சூரிய உதயம் : 5.55

ஒட்டை பானையிலும் சர்க்கரை இருக்கும்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

" உனது வாழ்க்கைக்கு
ஒரு எல்லை அமைத்து வாழ்
ஆனால் எல்லைக்குள் ஒருபோதும்
வாழ்க்கையை அமைத்து விடாதே "





| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,455 | Rs. 5,916 |


# சிதம்பரம் நடராஜர் கோயில் கனக சபையில் வழிபட தடை பதாகையை அகற்றச் சென்ற அலுவலர் முற்றுகை



கடலூர் , ஜுன்.26-

சிதம்பரம் நடராஜர் கோயில் கனக சபையில் வழிபட பொதுமக்களுக்கு தடை விதித்து வைக்கப்பட்ட பதாகையை அகற்றச் சென்ற இந்து சமய அறநிலையத் துறை செயல் அலுவலரை தீட்சிதர்கள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிதம்பரம் நடராஜர் கோயில் கனக சபையில் (சிற்றம்பல மேடை) பொதுமக்கள் ஜுன் 24, 25, 26, 27 ஆகிய 4 நாட்கள் வழிபட தடை விதித்துள்ளதாக கோயில் தீட்சிதர்கள் கனகசபை வாயில் அருகே பதாகை வைத்துள்ளனர். இதை பார்த்த பக்தர்கள், இது தமிழக அரசின் உத்தரவுக்கு எதிரானது எனக் கூறி கடலூரில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து நேற்று முந்தினம் மாலை இந்து சமய அறநிலையத்துறையின் தில்லை அம்மன் கோயில் செயல் அலுவலர் சரண்யா தலைமையில் சிதம்பரம் வட்டாட்சியர் செல்வகுமார் மற்றும் காவல்துறையினர் பதாகையை அகற்ற கோயிலுக்குள் சென்றனர். அப்போது காவல்துறை சார்பில் சரியான பாதுகாப்பு இல்லாததால் கோயில் தீட்சிதர்கள் தில்லை அம்மன் கோயில் செயல் அலுவலரை முற்றுகையிட்டு வாக்குவாதம் செய்து தகராறில் ஈடுபட்டனர்.

இதனால் கோயிலில் பரபரப்பு ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் செயல் அலுவலர், தீட்சிதர்களின் கூச்சலை சமாளிக்க முடியாமல் பதாகையை அகற்றாமலேயே கோயிலில் இருந்து திரும்பிச் சென்றார். இது குறித்து செயல் அலுவலர் சரண்யா கூறுகையில், பணி செய்ய விடாமல் தடுத்ததாக தீட்சிதர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்க உள்ளதாக கூறினார். இதனையடுத்து மீண்டும் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# பகலில் குறைவு: இரவில் அதிகம் மாறுபட்ட மின் கட்டணம்: மத்திய அரசு திட்டம்

புதுடெல்லி , ஜுன்.26-

பகலில் குறைவு; இரவில் அதிகம் என்ற அடிப்படையில்,மாறுபட்ட மின் கட்டணத்தை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய மின் அமைச்சகம் கூறியிருப்பதாவது: நாட்டின் மின்சார விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மின் கட்டணத்தை பகல் நேரத்தில் 20 சதவீதம் வரை குறைக்கவும், இரவு நேரத்தில் 20 சதவீதம் வரை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வெவ்வேறு நேரங்களுக்கு மாறுபட்ட மின்சாரக் கட்டணத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம்,நுகர்வோர் தங்களது மின்சாரப் பயன்பாட்டை மாற்றியமைத்து, மின் கட்டணத்தை குறைத்துக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மின் அமைச்சகம் இந்தப்புதியகொள்கையை, வணிக மற்றும் தொழில் துறைநுகர்வோருக்கு 2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்குக் கொண்டுவரத்



திட்டமிட்டுள்ளது. ஓராண்டுக்குப் பிறகு, விவசாயத்துறை நீங்கலாக, பெரும்பாலான மின் நுகர்வோர் இந்த புதிய மின்சாரக் கட்டணக் கொள்கையின் கீழ் வருவர்.

நுகர்வோர் தங்களது ஏசி இயந்திரத்தின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே, இரவு நேரத்தில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது, மின் உற்பத்தி நிலையங்களின் சிரமத்தைக் குறைக்கும் என்பதுடன், இரவு நேர மின்வெட்டு அபாயத்தையும் கணிசமாகக் குறைக்கும்.

மேலும், கார்பன் உமிழ்வையும் கட்டுப்படுத்த உதவும் என்று மத்திய மின் அமைச்சகம் தெரிவித்துள்ளது. தமிழக மின் நுகர்வோருக்கு பாதிப்பு இருக்காது: இது தொடர்பாக தமிழ்நாடு மின்வாரியம் அளித்துள்ள விளக்கம்: தமிழகத்தில் மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம், தமிழக ஒழுங்குமுறை ஆணையத்திடம் உள்ளது.

தற்போதுள்ள மின் கட்டண முறையில், உச்சநேரப் பயன்பாட்டுக்கான கட்டணம், வீட்டு நுகர்வோருக்கு நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே,இந்ததிருத்தத்தால் தமிழகத்தில் வீட்டு மின் நுகர்வோர் பாதிக்கப்பட மாட்டார்கள்.

மேலும், ஸ்மார்ட் மீட்டர் பொருத்திய பிறகு, குறித்த காலத்துக்குள் மின் கட்டணத்தைச் செலுத்தாதவர்களுக்கு அபராதம் வசூலிக்கலாம் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆனால், தற்போது தமிழகத்தில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணி நிறைவடையாததால், அபராதத் தொகை ஏதும் வசூலிக்கப்படமாட்டாது. எனவே, மத்திய அரசின் மாறுபட்ட மின் கட்டண திருத்தங்களால்,தமிழகமின் நுகர்வோர் பாதிக்கப்பட மாட்டார்கள். இவ்வாறு தமிழ்நாடு மின் வாரியம் தெரிவித்துள்ளது.






# ஆலங்குடி அருகே அரசு பள்ளியில் கதை சொல்லும் நிகழ்ச்சி



ஆலங்குடி, ஜுன்.26-

வாழ்வியலோடு இயைந்த கல்வி அவசியமானது என அரசுப் பள்ளி பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் செல்வா தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு ஊராட்சி புள்ளான்விடுதி குடியிருப்பு அரசு தொடக்கப் பள்ளியில் கதை சொல்லும் நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளித் தலைமை ஆசிரியர் வளர்மதி தலைமை வகித்தார், நிகழ்ச்சியில் பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களும் தங்களுக்குப் பிடித்த கதைகளை கூறினர். பின்னர், மாணவர்களை பாராட்டி அரசுப் பள்ளி பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் செல்வா பேசியதாவது,

கதை சொல்வது நல்ல கலை. கதைகளைக் கற்றுக்கொள்வதன் மூலமாக மாணவர்கள் நிறைய தெரிந்துகொள்கின்றனர். மேலும், கதைகளை பலரது முன்னிலையில் கூறும்போது கூச்சம் தவிர்க்கப்படுகிறது. நினைவாற்றல் அதிகரிக்கிறது. அறிவியல் பூர்வமாக மாணவர்களின் வளர்ச்சித் திறன் அதிகரிப்பதால்தான் தொடக்கநிலை மாணவர்களின் பாடங்கள் பெரும்பாலும் கதைகளாகவே கற்பிக்கப்படுகின்றன. பெற்றோர்கள் வாழ்வியலை கற்றுக்கொடுக்கிறார்கள், ஆசிரியர்கள் அதிலுள்ள அறிவியலை கற்றுக்கொடுக்கிறார்கள். வாழ்வியலோடு இயைந்த கல்விதான் அவசியமானது. ஆகையால்தான், பெற்றோர்களும்,ஆசிரியர்களும் இணைந்து செயல்படும் இடத்தில் மாணவர்களின் திறமைகள் மேம்படுகிறது என்றார். நிகழ்ச்சியில், பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் ஷீலா, இடைநிலை ஆசிரியர் சித்ரா மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

# குண்டடம் அருகே டாஸ்மாக் கடையை மூட வலியுறுத்தி அமைச்சரின் காரை முற்றுகையிட்ட பொதுமக்கள்



திருப்பூர் , ஜுன்.26-

குண்டடம் அருகே டாஸ்மாக் கடையை மூட வலியுறுத்தி பொதுமக்கள் அமைச்சரின் காரை முற்றுகையிட்டு மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

திருப்பூர் மாவட்டம், குண்டடம் அருகே சாலை பணிகளை துவக்கி வைக்க அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி ஆகியோர் வந்திருந்தனர். பின்னர், நிகழ்ச்சி முடிந்து காரில் கிளம்பிச் சென்றனர். அப்போது, உப்பாறு அணை அருகேயுள்ள தேர்ப்பாதையில், திரண்ட பெண்கள் உட்பட சுமார் 100-க்கும் மேற்பட்டோர் திடீரென அமைச்சர் கயல்விழியின் காரை முற்றுகையிட்டனர்.


இதனால் அதிர்ச்சி அடைந்த அமைச்சர் கயல்விழி காரிலிருந்து கீழே இறங்கினார்.

இதையடுத்து அவரை சூழ்ந்து கொண்ட மக்கள், தேர்ப்பாதையில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் கடையை நிரந்தரமாக மூட வேண்டும் என வலியுறுத்தியதோடு திடீரென, ரோட்டில் அமர்ந்து சாலை மறியலிலும் ஈடுபட்டனர். இந்நிலையில், அமைச்சர்களுடன் வந்திருந்த வருவாய்த் துறை அதிகாரிகள் மற்றும் போலீசார், பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக, அதிகாரிகள் உறுதியளித்ததைத் தொடர்ந்து, பொதுமக்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால், தாராபுரம் பூளவாடி ரோட்டில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# 100% சாதிவாரி இடப்பங்கீடே இலக்கு – வி.பி.சிங் பிறந்தநாளில் உறுதியேற்க ராமதாஸ் அழைப்பு





சென்னை , ஜுன்.26-

100% சாதிவாரி இடப்பங்கீடு என்ற இலக்கை எட்டுவதற்கு சமூகநீதி நாயகன் வி.பி.சிங்கின் பிறந்தநாளில் மீண்டும் உறுதியேற்போம் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள தனது ட்விட்டர் பதிவில் கூறியுள்ளதாவது: ''சமூகநீதி தளத்தில் என் மனம் கவர்ந்தவர்களில் ஒருவரும், எனது நண்பருமான முன்னாள் பிரதமர் வி.பி. சிங் அவர்களின் 93-ஆம் பிறந்தநாள் இன்று. இந்தியா விடுதலை அடைந்த நாளில் இருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மறுக்கப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டை எதிர்ப்பு சுனாமிகளை புறந்தள்ளி செயல்படுத்தியவர்; அதனால் ஆட்சிக் கட்டில் பறிக்கப்பட்டதை அலட்சியம் செய்தவர்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களின் மக்கள்தொகை அடிப்படையில், மக்கள்தொகைக்கு இணையான அளவில் இடப்பங்கீடு வழங்கவேண்டும் என்பதே அவரது விருப்பம். ஆனால், பாலாஜி வழக்கில் உச்சநீதிமன்றம் நிர்ணயித்த 50% உச்சவரம்பு தான் அதற்கு தடையாக இருந்தது. உயர்வகுப்பு ஏழைகளுக்காக இடஒதுக்கீட்டு வழக்கில் அந்த உச்சவரம்பு தகர்க்கப்பட்டு விட்ட நிலையில், இடஒதுக்கீடு என்ற தத்துவத்தை ஒதுக்கி வைத்து விட்டு, இடப்பங்கீடு என்ற தத்துவத்தை பின்பற்ற வேண்டும்.

மத்தியிலும்,மாநிலத்திலும் 100% சாதிவாரி இடப்பங்கீடு என்ற சமூகநீதி இலக்கை அடைவது தான் நமது லட்சியமாக இருக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கி பயணிக்கவும், போராடவும் சமூகநீதி நாயகன் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாளில் நாம் அனைவரும் மீண்டும் உறுதியேற்போம்.'' இவ்வாறு ராமதாஸ் தெரிவித்தார்.

# தனியார் பள்ளியிலிருந்து விலக்கி குழந்தைகளை அரசு பள்ளியில் சேர்த்த பெற்றோர்

ராமநாதபுரம், ஜுன்.26-

முதுகுளத்தூர் அருகே கிராம அரசு தொடக்கப் பள்ளியைமூடாமல்இருக்க, தனியார் பள்ளிகளில் படித்துவந்த குழந்தைகளை கிராமத்தினர் அரசுப் பள்ளியில் சேர்த்தனர். அம்மாணவர்களுக்கு துண்டு,மாலை அணிவித்து கிராமத்தினர் பள்ளிக்கு அனுப்பி வைத்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகேஎம்.கொட்டகுடி கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி உள்ளது. ஓராசிரியர் கொண்ட இப்பள்ளியில், 6 மாணவர்கள் மட்டுமே பயில்கின்றனர். மாணவர்கள்எண்ணிக்கை வெகுவாகக் குறைந்ததால், பள்ளியை மூடும் அவல நிலை ஏற்பட்டது. இதைத் தடுக்க, கிராமத்தினர் கூட்டம் நடத்தினர்.

அதில், எம். கொட்டகுடி கிராமத்திலிருந்து, கமுதி,



முதுகுளத்தூர், அபிராமம், பரமக்குடி உள்ளிட்ட நகர் பகுதிகளில் உள்ள தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பயின்ற 25 மாணவ, மாணவிகள் அனைவரையும், தங்களது கிராம அரசுப் பள்ளியில் தமிழ் வழிக் கல்வி பயில அனுப்புவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, அரசு தொடக்கப் பள்ளிக்குச் சென்ற புதிய மாணவர், மாணவிகளுக்கு,பெற்றோர், முதுகுளத்தூர் முன்னாள் எம்எல்ஏ மலேசியா பாண்டியன், பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் தர்மராஜன் உள்ளிட்டோர் துண்டு, பூ மாலை அணிவித்து அனுப்பி வைத்தனர். இம்மாணவர்களைதலைமை ஆசிரியர்முத்துக்கிருஷ்ணன் வரவேற்றார்.

இது குறித்து பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் தர்மராஜன் கூறுகையில், "மூடப் படவிருந்த இப்பள்ளியில் தற்போது 31 மாணவ, மாணவிகள்படிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, 2 ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். ஸ்மார்ட் வகுப்பறை உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும்" என்றார்.

## திருப்பட்டினம் பகுதியில் சாலை அமைப்பதில் முறைகேடு

# அளவுகோலுடன் சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் நேரில் ஆய்வு



காரைக்கால்,ஜுன்.26

காரைக்கால் மாவட்டம் திருப்பட்டினம் பகுதியில் உள்ள வடக்கட்டளைகிராமத்தில் புதுச்சேரி ஆதிதிராவிட வரையினர் கழகம் மூலம் சுமார் நான்கு கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டு சுமார் 67 லட்சம் மதிப்பீட்டில் சாலைகள் போடப்பட்டது. பணிகள் முடிக்கப்பட்ட நிலையில் நேற்று காலை சாலை பெயர்ந்து வருவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினரை தொடர்பு கொண்டு தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் அப்பகுதியில் ஆய்வுசெய்தார். ஆய்வின் போது அதிகாரிகள் இடத்தில் பேசினார் அவர்கள் நான்கு சென்டிமீட்டர் அளவிற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். சட்டமன்ற உறுப்பினர் அளவுகோலை வைத்து அளந்துபார்த்தார் முழுதாக இரண்டு சென்டிமீட்டர் அளவு கூட சாலை அமைக்கப்படவில்லை எனவும் கையில் பெயர்த்து எடுத்தால் சாலை கையோடு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தரமற்ற முறையில் சாலை அமைத்த அதிகாரிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதாகவும் உடனடியாக இந்த சாலையை மீண்டும் சரியான தரத்தில் அமைத்து தருவதாகவும் அதுவரையில் இந்த சாலை பணிக்கான தொகையை ஒப்பந்ததாரருக்கு கொடுக்கப்பட மாட்டாது எனவும் சட்டமன்ற உறுப்பினர் உத்தரவாதம் அளித்துள்ளார்.

# ஆய்க்குடியில் அமர்சேவா சங்கத்தின் மாற்றுத்திறனாளிகளின் மாநில பொதுக்குழு கூட்டம் மற்றும் முப்பெரும்விழா



தென்காசி, ஜுன்.26-

தென்காசி மாவட்டம் ஆய்க்குடியில் உலக புகழ் பெற்ற அமர்சேவா சங்கத்தின் மாற்றுத்திறனாளிகளின் சக்ஷம் தென் தமிழ்நாடு 2023-2024 ஆண்டுக்கான மாநில பொதுக்குழு கூட்டம் மற்றும் முப்பெரும விழாநடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தென்காசி ஆனந்தன் கலந்துகொண்டு, மாற்றுத்திறனாளி திறமையாளர்களுக்கு 40 மரக்கன்றுகளை பரிசாக வழங்கினார்கள். நிகழ்ச்சியில் சக்ஷம் அமைப்பின் தேசிய தலைவர் இராஜகோபால், மாநில பார்வையாளர் ஆடல்அரசு, தென்தமிழக நிர்வாகிகள் நல்லகண்ணு, இராஜகோபால், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தென்காசி ஆனந்தன் பேசும் போது, மாற்றுத்திறனாளிக்காக திவ்யா எனும் திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. மாற்றுத்திறனாளிகளை தெய்வீக திறன் படைத்தவர்கள் என அழைத்தவர் நரேந்திர மோடி, மாற்றுத்திறனாளிகளுக்காக 50இலட்சம் வரை கடன், பென்ஷன் மற்றும் பல நலத்திட்டங்களை மத்திய அரசு முன்னெடுத்துள்ளது நமது பாரத பிரதமர் நரேந்திர மோடியின் மத்திய அரசாங்கம் என ஆய்க்குடி அமர் சேவா சங்கத்தின் உரையாற்றினார்.



காரைக்காலில் புதியதாக பொறுப்பேற்றுள்ள முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மனிஷ் நேற்று மரியாதை நிமித்தமாக போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்காவை மதகடியில் அமைந்துள்ள அமைச்சர் அலுவலகத்தில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார்.



காரைக்காலில் டாக்டர் அம்பேத்கர் கல்வி அகாடமியின் ஆலோசனை கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர். இதில் தேர்தல் அதிகாரியாக. கூட்டுறவுத்துறை இயக்குனர்மணவாளன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த தேர்வு நிகழ்வில் தலைமை ஆலோசகர் மகாலிங்கம் , சட்ட ஆலோசகர் அருண் பிரகாஷ் கலந்து கொண்டார்கள். நடைபெற்று முடிந்த தேர்தலில்.கிராம நிர்வாக அதிகாரியும் சமூக ஆர்வலருமான மாறன், தலைவராகவும் துணைத்தலைவராகவும் ரங்கசாமி, ரமேஷ் குமார் , செயலாளர் கலையரசன், துணை பொதுச்செயலாளர் குணாநிதி, செயலாளர். சங்கர் ராஜன் , துணை செயலாளர் குமார், குணசேகரன் பொருளாளர், அபிநயன் செய்தி தொடர்பாளர் அருள் பிரகாஷ் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

# சிதம்பரம் நடராஜர் கோவில் தேரோட்டத் திருவிழா கோலாகலம் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் பங்கேற்பு



கடலூர் , ஜூன். 26-
சிதம்பரம் நடராஜர் கோவிலில் நேற்று தேரோட்டம் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தேர் வடம் பிடித்தனர்.

சிதம்பரம் நடராஜர் கோவில் ஆனி திருமஞ்சன தரிசன விழா கொடியேற்றம் கடந்த 17ம் தேதி நடந்தது. இதில் மேள தாளம் முழங்கிட வேத மந்திரங்கள் ஓதிட, தேவாரம், திருவாசகம் பாடிட உற்சவ ஆச்சாரியார் குருமூர்த்தி தீட்சிதர், கோவில் கொடி மரத்தில் கொடியேற்றினார். இதனைத் தொடர்ந்து தினசரி காலை, மாலை இரு வேளைகளிலும் தங்கம், வெள்ளி உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் பஞ்சமூர்த்திகள் வீதிஉலா நடைபெற்றது. விழாவின் 5வது நாள் உற்சவமான தெருவடைச்சான் உற்சவம் கடந்த 21ம் தேதி நடைபெற்றது. சனிக்கிழமை தங்க ரதத்தில் பிச்சாடனர் வீதியுலா நடந்தது. முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று நடந்தது.

மூலவர்களான ஸ்ரீமந் நடராஜமூர்த்தி, ஸ்ரீ சிவகாமசுந்தரி மற்றும் உற்சவர்கள் ஸ்ரீ சுப்பிரமணியர், ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் மேளதாளம் முழங்கிட, வேத மந்திரங்கள் ஓதிட, தனித்தனி தேர்களில் நேற்று அதிகாலை எழுந்தருளினர். பின்னர் கீழவீதி தேரடி நிலையிலிருந்து 8 மணிக்கு தேர்கள் புறப்பட்டன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய என கோஷங்களை எழுப்பியவாறு வடம் பிடித்து தேர்களை இழுத்தனர். தெற்குவீதி, மேலவீதி, வடக்குவீதி வழியாக தேர்கள் ஒன்றன்பின் ஒன்றாக மாலை கீழவீதி தேர்நிலையை அடைந்தது. நான்கு வீதிகளிலும் மண்டகபடிதாரர்கள் சுவாமிகளுக்கு சிறப்பு படையல் செய்தனர்.

தேர்களுக்கு முன்பு வீதிகளை இந்து ஆலய பாதுகாப்புக்குழுவினர், தில்லை திருமுறைக்கழகம், அப்பர் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த சிவனடியார்கள் மற்றும் திரளான பெண்கள் வீதிகளை நீரினால் கழுவி கோலமிட்டு உழவாரப்பணி மேற்கொண்டனர். சிவனடியார்கள் சிவ நடனம் ஆடியபடி சென்றனர். தேர்களுக்கு முன்பாக ஓய்வுபெற்ற ஆசிரியர் பொன்னம்பலம் தலைமையில் சந்திர பாலசுப்பிரமணியன் முன்னிலையில் ஓதுவார்கள் திருமுறை இன்னிசை ஆராதனையை நிகழ்த்திச் சென்றனர். பெண்கள் கும்மியடித்து சென்றனர். திருவிளக்கு முன்பு சிவ பக்தர்கள் சிவ வாத்தியங்களை முழங்கி நடனமாடி சென்றனர்.

இன்று( ஜூன்.26) ஆனி திருமஞ்சன தரிசன விழா நடைபெற உள்ளது. நாளை அதிகாலை 3 மணி முதல் 6 மணிவரை சிவகாமசுந்தரி அம்பாள் சமேத நடராஜருக்கு ஆயிரங்கால் முகப்பு மண்டபத்தில் மகா அபிஷேகம் நடைபெறுகிறது. பின்னர் 10 மணிக்கு சித் சபையில் ரகசிய பூஜையும், பஞ்சமூர்த்திகள் வீதி உலாவும் நடக்க இருக்கின்றன. பிற்பகல் 2 மணிக்குமேல் ஆனி திருமஞ்சன தரிசனமும், சித்சபா பிரவேசமும் நடக்க இருக்கிறது.

28 தேதி, புதன்கிழமை இரவு பஞ்சமூர்த்திகள் முத்துப்பல்லக்கு வீதிஉலாவுடன் உற்சவம் நிறைவடைகிறது. இதற்கான ஏற்படுகளை கோவில் பொது தீட்சிதர்கள் செய்து வருகின்றனர். ஆனி திருமஞ்சன தரிசன விழாவையொட்டி சிதம்பரம் நகரில் வெளிநாடு, வெளி மாநில மற்றும் உள்ளூர் பக்தர்கள் குவிந்துள்ளனர். சிதம்பரம் ஏஎஸ்பி ரகுபதி தலைமையில் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



சென்னை தண்டையார்பேட்டை வடக்கு மாவட்டம் ஆர். கே .நகர் மேற்கு பகுதி 47 வது வட்டத்தில் பாரதி நகர் சிறுவர் விளையாட்டு பூங்காவில் கொருக்குப்பேட்டை மற்றும் சாலிகிராமம் சக்தி பீடம் இணைந்து பூமி வெப்பம் ஆகுவதை தடுப்பதற்காக மேல்மருவத்தூர் சக்தி பீடத்தின் சார்பாக 60 மரங்கள் பூங்காவில் நடுவதற்கு உண்டான நிகழ்ச்சி நடைபெற்றது மரங்களை நட்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தவர் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் எம். சி. மணிமேகலை எம். சி .வட்ட செயலாளர் இரா.ஏழுமலை 38வது வட்டக் செயல்வீரர் எஸ்.கமருதீன் சக்தி பீட ஊழியர்கள் பக்தர்கள் பொதுமக்கள் திருவிழா கலந்து கொண்டு அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது,பூங்கா முழுவதும் மரங்களை நட்டு மேல்மருவத்தூர் சக்தி அம்மனுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# கீழபெரம்பூர் ஸ்ரீ பச்சை காளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் சுவாமி தரிசனம்



தரங்கம்பாடி, ஜூன். 26-
மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, பெரம்பூர் ஊராட்சி கீழபெரம்பூரில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த சுயம்புவாக எழுந்தருளியுள்ள அருள்மிகு பச்சை காளியம்மன் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக நிகழ்ச்சி நடைபெற்றது.

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாக கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குகின்ற தளங்களிலேயே பிரம்ம மங்களபுரம் என்கிற கீழபெரம்பூர் எனும் புதிய சேத்திரமும் ஒன்றாகும் வீரசோழன் ஆற்றிலிருந்து தென்பகுதியில் இச்சாசக்தியாகவும், கிரியாசக்தியாகவும், ஞானசக்தியாகவும் சுயம்புவாக எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ பச்சை காளியம்மன் கோயில் மஹா கும்பாபிஷேக விழாவிற்கான எஜமான ஸங்கல்பம், ஸ்ரீ மகா கணபதி ஹோமம், ஸ்ரீ மகாலட்சுமி ஹோமம், ஸ்ரீ நவக்கிரக ஹோமம், விக்னேஸ்வர ஹோமம், கோவிலின் பரிகார பூஜைகள் 24-ம் தேதி துவங்கி நடைபெற்றது.

நேற்று காலை 2-ம் கால யாகசாலை பூஜைகள் முடிவுற்றன. தொடர்ந்து மகா பூர்ணாகுதிக்கு பிறகு மேளதாள வாத்தியங்களுடன் புனித நீர் அடங்கிய கடங்கள் ஆலயத்தை சுற்றி எடுத்துவரப்பட்டன. அதனை தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கோயிலில் உள்ள கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. தொடர்ந்து கர்ப்பகிரகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பச்சை காளியம்மனுக்கு அபிஷேகமும், மகாதீபாரதனையும் செய்யப்பட்டது. கும்பாபிஷேக விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை கீழபெரம்பூர் கிராமவாசிகள் செய்திருந்தனர்.





மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, இலுப்பூர் ஊராட்சி தனியார் திருமண மண்டபத்தில் நிவேதா குழுமத்தின் ஓட்டுனர் குணசேகரன் இல்ல காதணி விழா நடைபெற்றது. இதில் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம் முருகன், ஒன்றிய செயலாளர் எம் அப்துல் மாலிக், மாவட்ட பிரதிநிதி கே எஸ் எஸ் கருணாநிதி, நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டு, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விக்கி, வரலாறு நாளிதழ் மாவட்ட செய்தியாளர் ராஜா யோசுதாஸ் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

# கண்ணன்கோட்டை கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம்





ஊத்துக்கோட்டை, ஜூன்26-
திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கண்ணன் கோட்டை கிராமத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு 1980-ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதன் பின்னர்,1994-ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்நிலையில்,இக்கோவிலை கிராமமக்கள் புதுப்பித்து நேற்று காலை 7.30 மணிக்கு மகா கும்பாபிஷேகத்தை சிறப்பாக செய்து வைத்தனர். கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெள்ளிக்கிழமை காலை பந்தக்கால் நடும் நிகழ்ச்சியும்,கொடியேற்றும் நிகழ்ச்சியும்,காப்பு கட்டும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. சனிக்கிழமை காலை கணபதி பூஜை, கணபதி ஹோமம், நவகிரக ஹோமம்,லட்சுமி ஹோமம் உள்ளிட்டவை நடைபெற்றது.

சனிக்கிழமை மதியம், இரவு கோவில் வளாகத்தில் அன்னதானம் நடைபெற்றது. இதன் பின்னர்,கோவில் வளாகத்தில் மாபெரும் இன்னிசை கச்சேரி நடைபெற்றது.நேற்று காலை இரண்டாம் கால யாகசாலை பூஜைகள்,விசேஷ திவ்ய ஹோமங்கள்,மகா பூர்ணாகுதி, யாத்ரா தானம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. இதன்பின்னர்,புனித நீர் அடங்கிய கலசங்களை ஊர்வலமாக கொண்டுவரும் நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்று காலை 7.30 மணிக்கு மாதர்பாக்கம் அரவிந்த் ஐயர், பெங்களூர் வினய்குமார் ஐயர் ஆகியோர் புனித நீரை ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.இதன் பின்னர்,மகா அலங்காரம்,மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது.

பின்னர், பக்தர்களுக்கு தீர்த்தம், பிரசாதம் உள்ளிட்டவைவழங்கப்பட்டது. கோவில் வளாகத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட வேணுகோபாலசுவாமி குதிரை வாகனத்தில் வானவேடிக்கையுடன், திருப்பதி - திருமலை தேவஸ்தான கே.சிவக்குமார் தலைமையில் பண்டரி பஜனையுடன் திருவிதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.இன்று முதல் 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, விழா குழுவினர்கள்,கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது ,எம்.பி.,எம்.எல்.ஏ பங்கேற்பு



சென்னை, ஜூன். 26-
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் அடிப்படையில் இளைஞர் நலன் விளையாட்டுமேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி ஆர்.கே நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதுவண்ணாரப்பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி மேல்நிலைபள்ளியில் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

மாநகராட்சி சார்பில் நடைபெற்ற மருத்துவ முகாமினைவடசென்னை நாடளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி தொடக்கி வைத்து மருத்துவ முகாமினை பார்வையிட்டனர்

மருத்துவ முகாமில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டம், பொது மருத்துவம், ஈசிஜி, கண் பரிசோதனை, பல் மருத்துவம் இடம் பெற்று இருந்தது இதில் புதுவண்ணாரப்பேட்டை சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை செய்து கொண்டனர்,

நிகழ்ச்சியில் தண்டையார்பேட்டை மாநகராட்சி மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன்,வரிவிதிப்புகுழு தலைவர் சர்பஜயா தாஸ், பகுதிகழகசெயலாளர்கள் இரா. லட்சுமணன், ஜெபதாஸ் பாண்டியன் மாமன்ற உறுப்பினர்கள் தேவி கதிரேசன், குமாரி நாகராஜன், மணிமேகலை ஏழுமலை, வட்ட கழக செயலாளர்கள் தா.வ.முகஜேந்திரன்,என்.எம். கதிரேசன், ம. நாகராஜன், ஜி.ஏழுமலை உள்ளிட்ட கழக தோழர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை பெருங்குடி பரம்புப்பட்டி ரோடு பிரேம் நகர் எதிரில் அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. விழாவை தலைவர் ரமேஷ் காரியத்தரிசி பிரேம்குமார், பொருளாளர் குமரன், முன்னாள் அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். சரவணன், தலைமை ஆலோசகர் ராமசுப்பிரமணியன் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## சென்னை திருவொற்றியூரில் அரசு உதவி பெறும் பள்ளியில்

# 30 ஆண்டுகளுக்கு முன்பு படித்த முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள் ஒன்று கூடல் சந்திப்பு நிகழ்ச்சி




சென்னை, ஜூன். 26-
சென்னை திருவொற்றியூர் பெரியார் நகர் பகுதியில் அமைந்துள்ள அரசு உதவி பெறும் வெள்ளையன் செட்டியார் தனியார் மேல்நிலைப் பள்ளி உள்ளது, இப்பள்ளியில் 1993 ஆம் ஆண்டு 1995 ஆண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு படித்த மாணவர்கள் வெவ்வேறு ஊர்களிலும், வெளிநாட்டில் வாழ்ந்து வருகின்றனர் அவர்களை இப்பள்ளிபடித்தமாணவர் சரவணன் என்பவர் சமூக வலைத்தளங்கள் மற்றும் வாட்ஸ்அப் குழு மூலம் அவர்களை இணைத்து முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை, கும்பகோணம், மதுரை, திருவாரூர், திருச்சி, கோயம்புத்தூர் உள்ளிட்ட மாவட்டத்தில் இருந்தும், மலேசியா சிங்கப்பூர் துபாய் வெளிநாட்டில் இருந்து சுமார் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் 30 ஆண்டுகள் கழித்து இன்று பள்ளியில் ஒன்று கூடினர்.

பள்ளிக்கு வந்த முன்னாள் மாணவர்கள் தங்களுக்குபாடம்நடத்திய முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர் பார்த்தமலரும்நினைவுகள் ஞாபகப்படுத்தி பேசி அவர்களின் காலில் விழுந்து மாணவர்கள் ஆசிர்வாதம் வாங்கினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாத முன்னாள் மாணவர்கள் வெளிநாட்டிலிருந்து ஸ்கைப்மூலம்நேரலையில் தங்களது முன்னாள் மாணவர்களையும் ஆசிரியர்களையும்பார்த்து பேசிதங்களதுமகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இப்ப பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் தற்போது அரசு கல்லூரியில் பேராசிரியராகவும் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகவும், கடற்படையில் கப்பல் கேப்டனாகவும், வங்கி அதிகாரி, ஆட்டோமொபைல் இன்ஜினியர், இந்திய ராணுவத்தின் மருத்துவராகவும் லெப்ட் இன் கமாண்டராக என பல துறைகளில் இருப்பதாகதெரிவித்தனர்

இதனையடுத்து நிகழ்ச்சில் முன்னாள் மாணவர்கள் பிள்ளைகள் யோகா பரதநாட்டியம் பேச்சு போட்டியில் கலந்து கொண்டனர், முன்னாள் மாணவர்கள் தங்களுக்கு பாடம் நடத்திய ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்துகாலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கி அவர்களுக்கு நினைவுப்பரிசாகவெள்ளி நாணயம் வழங்கினார்.

பள்ளி தலைமை ஆசிரியர் பஞ்சநாதன் மாணவர்களுக்கு.நினைவு பரிசு வழங்கினார். இதனையடுத்து ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் குடும்பத்தார் அனைவரும் குழு புகைப்படம் எடுத்து கொண்டனர்.

30 ஆண்டுகள் கழித்து பள்ளியில் படித்த நண்பர்களை சந்திக்கும் இந்த தருமன் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியதாகவும், அனைவரும் ஒன்று இனைந்த ஏழை எளிய மாணவர்களுக்கு உதவும் விதமாக தங்கள் குழு நண்பர்கள் உதவியுடன் செய்வதர்க்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தனர்.

பள்ளியின் படித்த முன்னாள் மாணவர்களுடன் இணைந்து இப்பள்ளியில் படிக்கும்மாணவர்களுக்கு நீட் தேர்விற்கான பயிற்சி வழங்கி முயற்சி மேற்கொள்ளப்படும் என முன்னாள் மாணவரான சென்னை மருத்துவக்கல்லூரி அறுவை சிகிச்சைப் பிரிவு பேராசிரியர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

# வேளாண், பொதுப்பணி, வருவாய்த்துறை இணைந்து செயல்பட கடைமடை விவசாயிகள் சங்க தலைவர் சுரேஷ் வலியுறுத்தல்



காரைக்கால் , ஜூன். 26-
காரைக்கால் மாவட்டத்தில் நடைபெற்ற குறை தீர்க்கும் கூட்டத்தில் காரைக்கால் கடைமடை விவசாயிகள் சங்க தலைவர் சுரேஷ் பேசியதாவது:

காரைக்கால் அகலகண்ணியில் இருந்து பேட்டை போகும் சாலை மற்றும் இடுகாடு பகுதியில் 15 மின்கம்பங்கள் உள்ளது. அக்கம்பங்களுக்கு தெரு விளக்கு கேட்டும் இதுவரை கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆழ்குழாய் கிணறு அமைத்த தென்னங்குடி, சுரக்குடி பகுதிகள் மற்றும் அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் மின் இணைப்பு தர வேண்டும். காரைக்கால் மேற்குபுற வழிச்சாலையில் மின் விளக்கு பணி முடிந்தவுடன், அந்த பகுதியில் சோலார் லைட் அமைத்தால், காரைக்கால் தளத்தெரு வாய்க்கால் பிள்ளைத்தெரு வரை விவசாயிகள் இரவு நேரங்களில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு உதவியாக இருக்கும்.

கடல் சார்ந்த மீனவர்களை அழைத்து, அமைச்சர்களை வைத்து கூட்டம் நடத்துவதைப்போல் உள்ளூர் மீனவர்களை அழைத்தும் கூட்டம் நடத்தப்பட வேண்டும். மீன்வளத்துறையின் மூலம் எத்தனை குளங்கள் உள்ளது? யாரிடம் உள்ளது? என்பதை கணக்கெடுக்க வேண்டும். திருநள்ளாறில் உள்ள மீன் வளர்ப்பு மையத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும். நெல் கொள்முதல் செய்வதற்கு முன்கூட்டியே எப்சிஐக்கு கடிதம் எழுத வேண்டும். பாசிக் சொத்துக்களைவிற்று 125 மாதங்களாக சம்பளம் இல்லாத ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். அல்லது வேறு துறைகளில் அவர்களை பணியில் அமர்த்த வேண்டும். விவசாயிகள் கடன் பெற அடங்கல் கொடுப்பதில் உள்ள சிரமத்தை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கால்நடைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை கண்டறிய ஆய்வு கூடம் ஏற்படுத்த வேண்டும். காரைக்கால் மாவட்டத்திற்கு ஒரு கால்நடை மருத்துவ கல்லூரி கொண்டுவர வேண்டும். கால்நடை துறையில் பாதிக்கப்படும் மாடு, கோழி, நாய்களுக்கு போதுமான மாத்திரைகளை எப்போதும் இருப்பில் வைக்க வேண்டும்.

திருநள்ளாறு ஸ்பிக் முதல் கருக்கன்குடி சாலையில் பல ஆண்டுகளாக குப்பைகள் சேகரிக்கப்பட்டுவருவதை தடுக்க வேண்டும். காரைக்கால் மாவட்டத்தில் பிடிஓ மூலம் தொகுதி வாரியாக எத்தனை கிலோ மீட்டர் வாய்க்கால், ஆறுகள் தூர்வாரப்பட்டுள்ளது? மீதம் எத்தனை கிலோ மீட்டர் உள்ளது? என்பதை தெரியப்படுத்த வேண்டும். நகர்ப்புறத்திலும் 100 நாள் வேலை திட்டத்தை கொண்டுவர வேண்டும்.

பொதுப்பணித்துறை காரைக்காலில் எத்தனை கிலோ மீட்டர் ஆறுகளை தூர்வாரியுள்ளது? இன்னும் எத்தனை கிலோ மீட்டார் தூர் வார வேண்டியுள்ளது? என்பதை தெரியப்படுத்த வேண்டும். வாய்க்கால் விவரத்தையும் தெரிவிக்க வேண்டும். குறுவை சாகுபடிக்கு தண்ணீர் வேண்டி வேளாண்துறை, பொதுப்பணித்துறைக்கு கடிதம் ஏதும் வழங்கியுள்ளதா? கொடுத்தும் ஏன் தண்ணீர் தரவில்லை? விவசாயிகளுக்கு ஏதுவாக வேளாண்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை இணைந்து செயல்பட வேண்டும். வேளாண்துறையில் விவசாயிகளை உள்ளடக்கிய கமிட்டி ஏதேனும் உள்ளதா? இருந்தால் தகவல் தெரிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அடையாள அட்டை விரைவாக கொடுக்க வேண்டும். பருத்தி பஞ்சு விதை நீக்கும் எந்திரம் தர வேண்டும். நெல் அறவை ஆலை திறக்க வேண்டும்.

கேவிகே & வில் விவசாயிகள் கொண்ட குழுக்கள் என்னென்ன உள்ளது? இருப்பின் அதன் விவரம் தர வேண்டும். பஜன்கோ முதல்வர் மீது கஞ்சா தொடர்பாக தொடர்ந்து செய்திகள் வருவது குறித்து கலெக்டர் விசாரணை நடத்த வேண்டும். பஜன்கோவில் விவசாயிகளுக்கு ஆராய்ச்சி ஏதேனும் செய்கிறார்களா? பஜன்கோவிற்கு விளை நிலங்களை கொடுத்த 54 பேர் பணி நியமனம் செய்யாமல் இருப்பதற்கான காரணம் என்ன? என்பதை தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# ஆலங்குடியில் வி.என் நகரத்தார்கள் அறக்கட்டளை பரிசளிப்பு விழா



ஆலங்குடி, ஜீன். 26-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் வி.என் நகரத்தார்கள் அறக்கட்டளை சார்பாக பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அரசரப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் குபேந்திரன், அலுவலக உதவியாளர் ஓய்வு தங்கராமன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் அரங்குளவன், அரசு ஒப்பந்ததாரர் பாஸ்கரன், பட்டதாரி ஆசிரியை வனிதா திருப்பதி ஆகியோர் கலந்து கொண்டு அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை பாராட்டி பரிசுகளை வழங்கினர்.

ஆலங்குடியில் திருமண மண்டபத்தில் கீழே கிடந்த விலை உயர்ந்த நகையை கண்டறிந்து அதனை உரியவர்களிடம் ஒப்படைத்த 7வது வார்டு கவுன்சிலர் சஷ்டி முருகன், நடந்துசென்ற பெண்ணின் கழுத்தில் இருந்து தங்கச் செயினை அறுத்து சென்ற திருடர்களை பிடிக்க உதவிய தினேஷ் குமார், மாநில அளவில் நடைபெற்ற 11 வயதுக்கான சதுரங்க போட்டியில் முதல் பரிசு பெற்ற ஹரிஷ் ராம் ஆகியோருக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. கல்லூரி பயின்று வரும் மூன்று மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது, நிகழ்ச்சியில் ஏற்பாடுகளை வி.என் நகரத்தார்கள் அறக்கட்டளை நிர்வாகிகள் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

தமிழக கவர்னரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி

# அரியலூரில் மதிமுக சார்பில் கையெழுத்து இயக்கம்



அரியலூர், ஜூன்.26-

தமிழக கவர்னரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, அரியலூரில் மதிமுக சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது.

தமிழக கவர்னர் ஆர். என். ரவியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என, இந்திய குடியரசுத் தலைவரை வலியுறுத்தி, அரியலூரில் மதிமுக சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. அரியலூர் பேருந்து நிலையம் அருகில், மாவட்ட மதிமுக சார்பில் நடத்தப்பட்ட இந்த கையெழுத்து இயக்க தொடக்க விழாவுக்கு, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு. சின்னப்பா தலைமை வகித்தார், மதிமுக மாவட்ட செயலாளர் ராமநாதன் வரவேற்று பேசினார்.

கையெழுத்து இயக்கத் தொடக்க விழாவில் திமுக சட்ட திட்ட திருத்தக்குழு உறுப்பினர் சுபா சந்திரசேகரன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ. க. கண்ணன், காங்கிரஸ் மாவட்டத் தலைவர் சங்கர், விடுதலை நீலமேகம், மதிமுக நகரச் செயலாளர் வக்கீல் மனோகரன், மற்றும் மதிமுக நிர்வாகிகள் கல்யாணகுமார், சகாதேவன், பழனிவேல், கலிஸ்து ராஜ், ஒன்றிய செயலாளர்கள் சங்கர், எழிலரசன், வக்கீல் கஜேந்திரன், வீர புகழேந்தி, மாணிக்கவாசு, கல்லூர் ராமகிருஷ்ணன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அறந்தாங்கி அருகே வெண்ணாமொழியேந்தல் ஸ்ரீ காத்தாயிஅம்மன் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா



அறந்தாங்கி,ஜூன்.26-

அறந்தாங்கி அருகே வெண்ணா மொழியேந்தல் ஸ்ரீ காத்தாயிஅம்மன் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. திரளான பக்தர்கள் கோபுர தரிசனம் செய்தனர், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே வெண்ணா மொழியேந்தல் கிராமத்தில் ஸ்ரீ காத்தாயி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது, இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென அப்பகுதி கிராமத்தர்களால் முடிவு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் நடைபெற்று முடிந்தது.

கடந்த 23ஆம் தேதி வெள்ளிக்கிழமை முதல் கால யாக பூஜை கணபதி ஹோமத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நாளான நேற்று நான்காம் காலயாக பூஜை நிறைவுபெற்று கடம் புறப்பாடு மேளதாளங்களுடன் தொடங்கி கோயிலை சுற்றி வலம்வந்த பின்னர் கோபுர கலசத்தை அடைந்தது நாகுடி சண்முகம் குருக்கள் தலைமையிலான சிவச்சாரியார்கள்வேதமந்திரங்கள் முழங்க மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. வெண்ணா மொழியேந்தல், பெருங்காடு, குன்னூர் பள்ளத்திவயல் உள்ளிட்ட சுற்று வட்டார கிராம பொதுமக்கள் ஆன்மீக மெய்யன்பர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் அருகே வாலாஜா நகரத்தில் கோயில் கும்பாபிஷேக விழா



அரியலூர், ஜூன்.26-

வாலாஜா நகரத்தில் மகாசக்தி மாரியம்மன் கோயில் உள்ளிட்ட, பல்வேறு கோயில்களின் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

அரியலூர் அருகே, வாலாஜா நகரம் கிராமத்தில் உள்ள, ஸ்ரீ விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான், விசாலாட்சி உடனாய விசுவநாதர் சிவாலயம், ஸ்ரீ கங்கை முத்து மாரியம்மன் என்கிற மகாசக்தி மாரியம்மன், ஸ்ரீ மகாகாளி அம்மன் உள்ளிட்ட கோயில்களுக்கு, கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

பன்னிரு திருமுறை நெறி வழிப்படி, யாக சாலை பூஜைகளுடன், கோயில் கோபுர கலசங்களுக்கு, நன்னீராட்டு பெருவிழா என்கிற பெருஞ்சாந்தி பெருவிழாவையும், தாமரைக் குளம் சிவாச்சாரியார் குமார குருக்கள், அரியலூர் சிவ சரவணன் உள்ளிட்ட சிவாச்சாரியார்கள் முன் நின்று நடத்தி வைத்தனர். முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் தெய்வ இளையராஜா, மற்றும் கோயில் அறங்காவல் குழுவினர் பக்த பிரமுகர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டின் படி நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில், தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு. சின்னப்பா, உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், அரியலூர் சுற்றுவட்டாரத்தில் உள்ள பல்வேறு ஊர்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள், கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு, இறை வழிபாடு செய்தனர். கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, ஏராளமான பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சியில் 21வது கூட்டமைப்பு தலைவர்கள் கூட்டம்



தென்காசி,ஜூன்.26-

தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கில் வைத்து 21வது கூட்டமைப்பு தலைவர்கள் கூட்டம் தலைவர் டி.கே.பாண்டியன் தலைமையில், செயலாளர் சு. பூமிநாத் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு எ.பி. என். தலைவர் ஒய்.அழகு துரை பொட்டல்புதூர் தலைவர் கணேசன், திருமலையப்பபுரம் தலைவர் ச.மாரியப்பன், மடத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் முத்தமிழ் செல்வி ரஞ்சித், மேல ஆம்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் குயிலி லட்சுமணன், துப்பாக்குடி ஊராட்சி மன்றத் தலைவர் செண்பகவல்லி ஜெகநாதன், மற்றும் ரவனசமுத்திரம் ஊராட்சி மன்றத் தலைவர் முகமது உசேன், தெற்கு மடத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் பிரேம ராதா ஜெயம், பாப்பாங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் இ.முருகன், கீழ ஆம்பூர் ஊராட்சி மன்றத் தலைவர்பி. மாரி சுப்பு ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, ஊராட்சி செயலர்களுக்கு நிர்வாகம் சம்பந்தமாக அடிக்கடி கூட்டம் வைப்பதால் ஊராட்சி நிர்வாகம் பாதிக்கப்படுகிறது, கடையம் பகுதிகளில் குளங்கள் கால்வாய்கள் மடைகள் போர்க்கால அடிப்படையில் சீர் செய்ய வேண்டும், ராம நதியிலிருந்து இரண்டாத்துமுக்கு வரை செங்கல் சூலையில் உள்ள மோட்டார்களை உடனே அப்புறப்படுத்த வேண்டும் அப்போதுதான் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்க முடியும், ராமநதி, கடனாநதி ஆறுகளில் உள்ள சீமை கருவேலைகளையும் புதர் செடிகளையும் அகற்ற வேண்டும், தென்காசி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என கூட்டத்தின் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# குடுமியான்மலை வேளாண்மை கல்லூரியில் யோகா தினம்



ஆதனக்கோட்டை, ஜூன்.26-

அன்னவாசல் அருகே உள்ள குடுமியான்மலை அரசு வேளாண்மை கல்லூரியில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு அரசு வேளாண்மை கல்லூரி நக்கீரன் தலைமை தாங்கினார்.

இதில் புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவர் சரவணன் யோகா பயிற்சியாளர் இமயராணி ஆகியோர் கலந்து கொண்டு பத்மாசனம், கோமுகாசனம், வஜ்ராசனம், புஜங்காசனம் உள்ளிட்ட பல்வேறு யோகாசனங்களும் அவற்றின் பயன்கள் குறித்து மாணவ மாணவிகளுக்கு பயிற்சி அளித்தனர், இதற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டுநலப்பணி திட்ட அலுவலர் விஜயக்குமார் செய்திருந்தார், இதில் 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

# ஆலங்குடியில் இலக்கிய பேரவை கூட்டம்



ஆலங்குடி, ஜூன்.26-

இலக்கிய பேரவை கூட்டம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு இலக்கிய பேரவைத் தலைவர் அ.க.முத்து தலைமை வைத்தார். செயலாளர் பாபு ஜான், பொருளாளர் கருணாகரன், கௌரவ ஆலோசகர் கருப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கவிஞர் நேசன் மகதி கவிஞர் ரம. ராமநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் வட்டாட்சியர் (ஓய்வு) ராஜசேகரன், தலைமை ஆசிரியர் வின்சென்ட், முருகேசன், முத்துராமன் ஆசிரியர் ஓய்வு, கருப்பையா ஆசிரியர் ஓய்வு, சரவணன், மற்றும் தமிழ் பற்றாளர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை முத்து மீனாட்சி மருத்துவமனையில் 85 வயது முதியவருக்கு ஸ்டண்ட் பொருத்தி மருத்துவர்கள் சாதனை



புதுக்கோட்டை, ஜூன்.26-

புதுக்கோட்டை முத்து மீனாட்சி மருத்துவமனையில் மாரடைப்பு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் திருமயத்தை சார்ந்த சுப்பையா(85) அவசர சிகிச்சை பிரிவுக்கு வந்துள்ளார், அவரைப் பரிசோதித்த இருதய சிகிச்சை பிரிவு மருத்துவர்கள் மனோஜ் மற்றும் தியாகராஜன் தலைமையிலான மருத்துவ குழுவினர் இருதயத்திற்கு செல்லும் இரத்தக் குழாயில் மோசமான அடைப்பு ஏற்பட்டுள்ளதற்கு உடனடியாக ஸ்டண்ட் பொருத்தி இருதயத்திற்கு ரத்த ஓட்டத்தை ஏற்படுத்தும் முயற்சியாக நோயாளியை கேத் லேப் எனப்படும் இருதய உள் ஊடுருவி மையத்தில் அவருக்கு ஸ்டண்ட் சிகிச்சை அளிக்கப்பட்டு நோயாளி சுப்பையா காப்பாற்றப்பட்டார் மேலும் இருதய மருத்துவர் மனோஜ் கூறுகையில் இது போன்ற மாரடைப்பு ஏற்பட்ட நோயாளிகளை விரைவாக கேத் லேப் வசதி உள்ள மருத்துவமனைக்கு அழைத்து செல்வதன் மூலம் இருதய ரத்தக்குழாய் அடைப்பை சரி செய்து நோயாளியை உயிர் பிழைக்க வைக்கலாம் என தெரிவித்தார்.

மேலும் இதுபோன்று புதுக்கோட்டை முத்து மீனாட்சி மருத்துவமனையில் 500க்கும் மேற்பட்டவர்கள் காப்பாற்றப்பட்டதாகவும் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் மருத்துவர் பெரியசாமி தெரிவித்தார், புதுக்கோட்டை மாவட்ட சுற்றுவட்டாரத்தில் உயர்ரக கேத் லேப் வசதி முத்துமீனாட்சி மருத்துவமனையில் இருப்பதால் அவசர நோயாளிகளுக்கு விரைவாக சிகிச்சை அளித்து எண்ணற்ற உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருவதாக மருத்துவமனையின் செயல் அலுவலர் பிரேம் குமார் ராஜன் தெரிவித்தார் நோயாளி சுப்பையாவின் உறவினர்கள் குடும்பத்தாரும் முத்து மீனாட்சி மருத்துவமனை நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

# சீப்புக்காரன்பட்டி செல்வவிநாயகர் ஆலய கும்பாபிஷேக விழா கோலாகலம்



ஆதனக்கோட்டை, ஜூன்.26-

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள சீப்புக்காரன்பட்டி கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ செல்வவிநாயகர் ஸ்ரீ கோரமுனீஸ்வரர் ஆலய அஸ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

கோர முனியாண்டவர் திடலில் அமைக்கப்பட்ட யாகசாலையில் புண்ணிய நதிகளில் இருந்து எடுத்துவரப்பட்ட நீரை யாகசாலை பூஜையில் வைத்து முதல்கால பூஜையில் விக்னேஸ்வரபூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லஷ்மி ஹோமம் பூர்ணாஹூதியும் இரண்டாம் கால யாக வேள்வியில் மூலமந்திர ஹோமம் தீபாராதனை காட்டப்பட்டு கடம் புறப்பட்டு யாக சாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீரை கலசத்தில் ஊற்றி சிவாச்சாரியர்கள் கும்பாபிஷேகம் செய்தனர். இந்த கும்பாபிஷேக விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர், பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் தொழில்துறை அமைச்சர் தலைமையில் கலந்தாய்வு கூட்டம்



அரியலூர், ஜூன்.26-

அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் தொழில்துறை அமைச்சர் தலைமை கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது

அரியலூரில் உள்ள தமிழ்நாடு அரசு சிமெண்ட் ஆலைவளாககூட்ட அரங்கில், புதிய சிமெண்ட் ஆலையை மேம்படுத்துவது குறித்து, அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம், தொழில்துறை அமைச்சர் ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. முன்னதாக, ஆலையில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள, சிறுவர் பூங்காவை, போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் முன்னிலையில், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்து மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு சிமெண்ட் நிறுவன நிர்வாக இயக்குநர் ஆர்.கண்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய ஆலையை மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள், தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல், விற்பனையை அதிகப்படுத்துதல் ஆகியவைகள் குறித்து, அலுவலர்களுடன் கலந்து ஆலோசித்த பின், தொழில்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தற்போது 'நான் முதல்வன்' போன்ற மகத்தான திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார். அந்த திட்டத்தில் தொழிலுக்கு தேவையான திறன்கள் வளர்க்க அறிவுறுத்திவுள்ளார், அதனை பயன்படுத்தி இப்பகுதி மக்கள் தங்கள் திறனை மேம்படுத்தி கொண்டால் வாய்ப்புகள் இன்னும் அதிகரிக்கும். மேலும் தொழில்துறையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன் மூலம் வேலைவாய்ப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. நேற்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் வெளியிலிருந்து ஆய்வுக்காக வரும் மாணவர்கள் குறித்தும், இதுவரை வந்த மாணவர்கள் குறித்தும் கேட்கப்பட்டது. சுற்றுவட்டாரத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள் விருப்பப்பட்டால் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் சுற்றி பார்க்க அனுமதிப்பது குறித்து ஆலை நிர்வாகம் பரிசீலிக்கும் என தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இந்த கலந்தய்வுக் கூட்டத்தில் துணை பொது மேலாளர் ரவிச்சந்திரன், அரியலூர் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், துணை காவல் கண்காணிப்பாளர் சங்கர்கணேஷ், வட்டாட்சியர்கள் கண்ணன், கதிரவன், ஆலையின் அனைத்து பிரிவு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் எஸ்டிபிஐ கட்சி முப்பெரும் விழா திரளானோர் பங்கேற்பு



தென்காசி, ஜூன்.26-

எஸ்டிபிஐ கட்சியின் 15 ஆம்ஆண்டுதுவக்கதினத்தை முன்னிட்டு முப்பெரும் விழா கொடிமரம் திடலில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட பொதுச்செயலாளர் செய்யது மஹ்மூத் தலைமை வகித்தார், நகரத் தலைவர் பாதுஷா வரவேற்புரை ஆற்றினார் விழாவிற்கு நகரச் செயலாளர் ஷேக் மைதீன்துணைத் தலைவர் பீர் முஹம்மது, துணைச்செயலாளர் ஜாஹிர் ஹுசைன், பொருளாளர் பாதுஷா, செயற்குழு உறுப்பினர்கள் ரபீக், கலீல் ரஹ்மான், சலீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்டத் தலைவர் சிக்கந்தர், மாவட்ட அமைப்பு பொதுச் செயலாளர் திவான் ஒலி, மாவட்ட செயலாளர் நூர் முஹம்மது, துணைத் தலைவர் யாசர் கான், பொருளாளர் கல்வத் கனி, செயற்குழு உறுப்பினர்கள் சீனா, சேனா, சர்தார், முஹம்மது அலி, முஹம்மது கனி ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக திமுக விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கோமதி நாயகம், திமுக தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு அணி அமைப்பாளர் இஞ்சி முஹம்மது இஸ்மாயில், தென்காசி நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மாடசாமி, நகர சிறுபான்மை பிரிவுத் தலைவர் ஹலால் சலீம்,விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணைச்செயலாளர் சித்திக், மாநில செய்தி தொடர்பு மைய செயலாளர் ஆஷிக் உசேன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

விழாவில் எஸ்டிபிஐ கட்சியின் வர்த்தகர் அணி மாநில பொதுச் செயலாளர் ஜாபர் அலி உஸ்மானி கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். விழாவில் 100 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. நகர பொருளாளர் பாதுஷா நன்றி கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஆம்பூர் அருகே தண்டவாளத்தில் பாறைகள் ரயிலை தவிர்க்க சதியா?

# ஆன்மிகத்தால் மக்களை பிரிக்கும் கட்சிகளுக்கு தமிழகத்தில் இடமில்லை





# டாஸ்மாக் கடை: அமைச்சர்களை முற்றுகையிட்ட பொதுமக்கள்


| சென்னை / புதுக்கோட்டை | 26.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
# வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**ம. பொ. சிவஞானம்** , தமிழக அரசியல்வாதி, தமிழறிஞர் (பி.1906) (இ.1995)




**இளையபெருமாள்** , தமிழக தலித் அரசியல்வாதி (பி.1924) (இ.2005)



**அப்துல் ஜப்பார்** , தமிழக-இலங்கை ஊடகவியலாளர் (பி.1939) (இ.2020)



## இன்றைய நினைவு நாள்

**எம். எம். தண்டபாணி தேசிகர்** , தமிழிசைக் கலைஞர் (பி.1908) (இ.1972)



**செ. எ. ஆனந்தராஜன்** , இலங்கைத் தமிழ் கல்வியாளர் (பி.1932) (இ.1985)



**சித்திரவதைக்கு ஆளானோருக்கான சர்வதேச ஆதரவு நாள்**

**போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான பன்னாட்டு நாள்**